
# இலங்கையில் ஜனநாயகம் மற்றும் மீள்நல்லிணக்கம் தொடர்பிலான ஆய்வு

## பிரதான முடிவுகள்



மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சோஷல் இன்டிகேட்டர்

மார்ச் 2024

## அறிமுகம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்துக்கணிப்பு ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் சமீபத்தில் நடாத்தப்பட்ட ஜனநாயகம் மற்றும் மீள்நல்லிணக்கம் தொடர்பிலான ஆய்வின் பிரதான முடிவுகளை பகிர்ந்து கொள்வதே இந்த சுருக்கமான அறிக்கையின் நோக்கமாகும். இலங்கையில் ஜனநாயகம் மற்றும் மீள்நல்லிணக்கம் போன்ற விடயங்களுடன் தொடர்பான பொதுமக்களின் தற்போதைய அபிப்பிராயங்களை அறிந்து கொள்ளும் வகையில் இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டது. இந்தச் சுருக்கமான அறிக்கையில், ஜனநாயகத்திற்கான ஆதரவு, ஜனநாயக நிறுவனங்கள் மீதான நம்பிக்கை, மீள்நல்லிணக்கத்தின் முன்னேற்றம் தொடர்பிலான மதீப்பீடு மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மீதான அணுகுமுறை போன்ற விடயங்களுடன் தொடர்புபட்ட ஆய்வு முடிவுகள் ஆராயப்பட்டுள்ளது.


இந்த கணக்கெடுப்பாய்வில், 25 மாவட்டங்களில் சேர்ந்த - சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய நான்கு இன சமூகங்களையும் சேர்ந்த 1350 நபர்கள் கலந்து கொண்டனர். பல நிலை அடுக்கு எழுமாற்று மாதிரி நுட்பத்தைப் பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்ட பதிலளிப்பவர்களுடன் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தின் மூலம் ஆய்வு நடாத்தப்பட்டது. வெளிக்கள ஆய்வானது நான்கு இன சமூகங்களையும் சேர்ந்த 73 வெளிக்கள ஆய்வாளர்களைக் (ஆண் மற்றும் பெண்) கொண்டு 2024 ஜனவரி 4 ஆம்திகதி முதல் 22 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. தரவு சேகரிப்பு செயல்முறை நிறைவடைந்ததைத் தொடர்ந்து தரவுத்தொகுப்பானது சனத்தொகையின் மாவட்டம் மற்றும் இன விகிதாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் நிறையேற்றப்பட்டது. சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரவியல் தொகுப்பை (SPSS) பயன்படுத்தி தரவுத்தொகுப்பு பகுப்பாய்வுசெய்யப்பட்டது

# பிரதான ஆய்வு முடிவுகள்

## ஜனநாயகம் தொடர்பிலான ஆதரவு


இலங்கையர்கள் ஜனநாயகத்தின் மீது மிகுந்த ஆதரவை வெளிப்படுத்துகின்றனர். ஆய்வு முடிவுகளின்படி (வரைபு 01) இலங்கையில், நான்கில் மூன்று பகுதியினர் வேறு எந்த வகையான ஆட்சியையும் விட ஜனநாயகம் விரும்பத்தக்கது என்று தெரிவிக்கின்றனர். இந்தக் கண்ணோட்டமானது, நான்கு பிரதான இன சமூகங்களைச் (சிங்களம், தமிழ், மலையகத் தமிழ், முஸ்லிம்) சேர்ந்தவர்களாலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. மிக முக்கியமாக, கடந்த 13 வருடங்களாக சோஷல் இன்டிகேட்டர் - மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், (வரைபு 02), ஜனநாயகத்திற்கான இந்த வலுவான ஆதரவு மாற்றமடையாமல் காணப்படுகின்றது. இருந்த போதிலும், சமீபத்திய ஆய்வு முடிவுகளின் படி, இலங்கையர்களில் பத்தில் இல் ஒருவர் “குறிப்பிட்ட சில நிலைமைகளில், ஜனநாயகத்தை விட சர்வாதிகார அரசாங்கமானது விரும்பத்தக்கது” என்ற கருத்தை தெரிவிக்கின்றனர். 2018 இல் சிறிசேன-விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அரசியல் குழப்பங்களுடனான காலப்பகுதியில் சர்வாதிகார ஆட்சிக்கான ஆதரவு அதிகமாக இருந்ததை ஆய்வுத் தொடர் வெளிப்படுத்துகின்றது. எனவே, ஜனநாயகத்திற்கு வலுவான ஆதரவு இருந்த போதிலும், ஜனநாயக ஆட்சி மீதான விரக்தி அதிகரிக்கின்ற போது, சர்வாதிகார ஆட்சிக்கான ஆதரவு புத்துயிர் பெறுவதற்கான வாய்ப்பு இருப்பதை ஆய்வுத் தொடர் பரிந்துரை செய்கின்றது.

வரைபு 01- ஜனநாயகத்திற்கான ஆதரவு தேசிய மற்றும் இன அடிப்படையில்




- மற்றைய ஆட்சி முறைகளை விட ஜனநாயகமானது விரும்பத்தக்கது
- குறிப்பிட்ட சில நிலைமைகளில், ஜனநாயகத்தை விட சர்வாதிகார அரசாங்கமானது விரும்பத்தக்கது
- எனக்கு அரசானது ஜனநாயகமானதா அல்லது ஜனநாயகமற்றதா என்பது அவசியமற்றது.
- எந்தவிதக் கருத்துமில்லை / தெரியாது

வரைபு 02- ஜனநாயகத்திற்கான ஆதரவு வருட அடிப்படையில்





- மற்றைய ஆட்சி முறைகளை விட ஜனநாயகமானது விரும்பத்தக்கது
- குறிப்பிட்ட சில நிலைமைகளில், ஜனநாயகத்தை விட சர்வாதிகார அரசாங்கமானது விரும்பத்தக்கது
- எனக்கு அரசானது ஜனநாயகமானதா அல்லது ஜனநாயகமற்றதா என்பது அவசியமற்றது.
- எந்தவிதக் கருத்துமில்லை / தெரியாது

## நிறுவனங்கள் மீதான நம்பிக்கை

ஜனநாயக நிறுவனங்களின் சட்டபூர்வ தன்மைக்கு, பொதுமக்கள் அந்த நிறுவனங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையானது மிகவும் முக்கியமானதாகும். இருப்பினும், எல்லா நிறுவனங்களும் எல்லா நேரங்களிலும் மக்களின் நம்பிக்கையை சமமான அளவில் அனுபவிப்பதில்லை. இராணுவம் மற்றும் நீதிமன்றங்கள் நாட்டின்

மிகவும் நம்பகரமான நிறுவனங்கள் என்ற அந்தஸ்தை அனுபவிக்கின்றதை ஆய்வுத் தொடரின் முடிவுகள் தெரிவிக்கின்றன. இந்த இரண்டு நிறுவனங்களின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை, கடந்த தசாப்த காலப்பகுதியில் கிட்டத்தட்ட மாறாமல் இருக்கின்றது. இராணுவம் மற்றும் நீதிமன்றங்களுடன் ஒப்பிடும் போது பொலிஸ் குறைந்தளவிலான பொதுமக்கள் நம்பிக்கையை அனுபவிக்கின்றனர். கடந்த 13 வருடங்களில் பொலிஸ் மீதான நம்பிக்கையில் பாரிய மாற்றங்கள் ஏதுமில்லை. எவ்வாறாயினும், இராணுவம் மற்றும் நீதிமன்றங்களுடன் ஒப்பிடுகையில், சட்டவாக்க நிறுவனங்கள் மற்றும் சட்டவாக்குனர்களை உருவாக்கும் அமைப்புக்கள் - அரசியல் கட்சிகள் மீதான பொது மக்களின் நம்பிக்கை குறைந்தளவில் காணப்படுவது மட்டுமன்றி, அது கடந்த தசாப்த காலப்பகுதியில் சரிவடைந்தும் உள்ளது. பாராளுமன்றத்தின் பங்களிப்பு செயற்படுத்தப்படல் தொடர்பில் 2011 இல் 63% இலங்கையர்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தி இருந்தார்கள். ஆனால், 2024 இல் அது 22% ஆகக் குறைவடைந்துள்ளது. இந்த ஆய்வுத் தொடரில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நிறுவனங்களுக்கு மத்தியில், அரசியல் கட்சிகளுக்கே மக்கள் குறைந்த அளவிலான நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர். அரசியல் கட்சிகள் மீதான மக்களின் நம்பிக்கை 2011 இல் 56% ஆக இருந்தது. 2024 இல் 19% ஆக குறைவடைந்துள்ளது. இலங்கை போன்ற நாடுகளில் ஜனநாயகம், முன்னர் இல்லாத வகையிலான சவால்களை எதிர்கொள்வதை இந்த ஆய்வு முடிவுகள் மறைமுகமாக குறிப்பிடுகின்றன. மக்கள் தம்மை ஆள்வதற்கான சிறந்த ஆட்சி வடிவமாக மேற்கத்தேய பிரதிநிதித்துவ ஜனநாயக முறையை நம்பினாலும், அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தம்மை ஆளும் நிலைமை தொடர்பில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை

வரைபு 03: நிறுவனங்களின் மீதான நம்பிக்கை வருட அடிப்படையில்





| நிறுவனங்கள் | | 2011 | 2013 | 2014 | 2015 | 2016 | 2018 | 2019 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தேசிய அரசாங்கம் | 76.9% | 84.2% | 78.5% | 74.5% | 68.7% | 38.8% | | 40.1% |
| | எனது மாகாண அரசாங்கம் | 66.8% | 72.7% | 68.2% | 67.4% | 64.6% | 43.6% | | 45.5% |
| | பொலிஸ் | 67.5% | 73.5% | 67.8% | 71.6% | 63.5% | 56.4% | 70.5% | 66.9% |
| | இராணுவம் | 83.6% | 86.4% | 81.4% | 79.1% | 79.0% | 81.9% | 86.1% | 84.5% |
| | நீதிமன்றங்கள் | 77.8% | 82.8% | 76.0% | 86.2% | 79.7% | 73.5% | 85.4% | 79.2% |
| | பாராளுமன்றம் | 63.0% | 68.3% | 57.9% | 60.7% | 48.0% | 25.5% | 24.1% | 22.4% |
| | அரசியல் கட்சிகள் | 55.6% | 44.1% | 42.7% | 45.1% | 36.7% | 22.9% | 24.1% | 19.0% |


## மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் தொடர்பிலான முன்னேற்றம்

பாதுகாப்புப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்கள் கடந்த பின்னரும் நல்லிணக்கம் என்பது நிறைவுபடாத பணியாகவே இருக்கின்றது. ஆய்வு முடிவுகளின்படி, பெரும்பான்மையான இலங்கையர்கள் (62.1%) போருக்குப் பின்னரான இலங்கையில், மீள்நல்லிணக்கம் தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தின் முன்னெடுப்புக்கள் குறித்து திருப்தியடையவில்லை. இக் கருத்தானது அனைத்து பிரதான இனச் சமூகங்கள் (சிங்கள, தமிழ், மலையக தமிழ் மற்றும் முஸ்லிம்) மத்தியிலும் காணப்படுகின்றது. இதே போன்று 2018 இல் செய்யப்பட்ட ஆய்வு முடிவுகளோடு ஒப்பிடுகையில், மீள்நல்லிணக்கம் தொடர்பில் அப்போதைய அரசாங்கத்தின் முன்னெடுப்புக்கள் குறித்து அதிகளவான மக்கள் தங்களின் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர்

வரைபு 04: மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் தொடர்பிலான முன்னேற்றம் குறித்த திருப்தி தேசிய மற்றும் இனம் அடிப்படையில்




வரைபு 05: மீள்நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் தொடர்பிலான முன்னேற்றம் குறித்த திருப்தி வருட அடிப்படையில்





## அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மீதான அணுகுமுறை

கிட்டத்தட்ட அரைவாசி இலங்கையர்கள் (42.9%) அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறைகள் குறித்து அறிந்து வைத்திருப்பதாகத் தெரிவிக்கின்றனர். இது இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறைகள் குறித்து இலங்கையர்கள் மத்தியில் மிதமான விழிப்புணர்வு


உள்ளமையை வெளிப்படுத்துகின்றது. இந்த விழிப்புணர்வானது, சிங்களவர்கள் (40.4%) மற்றும் முஸ்லிம் (35.7%) சமூகங்களை விட தமிழ் (56.3%) மற்றும் மலையக தமிழ் (69.8%) சமூகங்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க வகையில் அதிகமாகக் காணப்படுகின்றது. மேலும், இந்த விழிப்புணர்வு 2016 முதல் 2024 வரையிலான கடந்த 8 ஆண்டு காலத்தில் (2016 - 23%, 2017 - 31.4%, 2024 - 42.9%) குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது.

வரைபு 06: அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பான விழிப்புணர்வு தேசிய மற்றும் இனம் அடிப்படையில்




- முழுமையாக அறிந்துவைத்துள்ளேன்
- ஓரளவு அறிந்துவைத்துள்ளேன்
- அவ்விடயம் இடம்பெறுவதை அறிந்துவைத்துள்ளேன், ஆயினும் மேலதிக விபரங்கள் மற்றும் தற்போதைய நிலை தொடர்பில் எதுவும் தெரியாது
- தற்போது அரசியலமைப்புச் சீர்திருத்தச் செயல்முறை நிகழ்கின்றது என்பதை நான் அறிந்திருக்கவில்லை
- தெரியாது / நிச்சயமில்லை


வரைபு 07: அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பான விழிப்புணர்வு வருட அடிப்படையில்





- முழுமையாக அறிந்துவைத்துள்ளேன்
- ஓரளவு அறிந்துவைத்துள்ளேன்
- அவ்விடயம் இடம்பெறுவதை அறிந்துவைத்துள்ளேன், ஆயினும் மேலதிக விபரங்கள் மற்றும் தற்போதைய நிலை தொடர்பில் எதுவும் தெரியாது
- தற்போது அரசியலமைப்புச் சீர்திருத்தச் செயல்முறை நிகழ்கின்றது என்பதை நான் அறிந்திருக்கவில்லை
- தெரியாது / நிச்சயமில்லை

ஆய்வு முடிவுகளின்படி, பெரும்பான்மையான இலங்கையர்கள் புதியதொரு அரசியலமைப்பிற்கு (52.3%) ஆதரவு தெரிவிக்கின்றமை தெளிவாகின்றது. இந்தக் கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளவர்களின் சதவீதம் கடந்த 8 வருடங்களில் அதாவது, 2016 முதல் 2024 வரையான காலப்பகுதில் சிங்களம் (52.4%), தமிழ் (54.1%) மற்றும் முஸ்லிம் (56%) சமூகங்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. ஆயினும், தற்போதைய அரசியலமைப்பானது தேவையான சில திருத்தங்களுடன் தொடர வேண்டும் என்று இலங்கையர்களில் ஒரு பிரிவினர் நம்புகின்றனர்.

வரைபு 08: அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான ஆதரவு தேசிய மற்றும் இனம் அடிப்படையில்




வரைபு 09: அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான ஆதரவு வருட அடிப்படையில்



மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) என்பது ஒரு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகியவற்றின் மீது அவதானம் செலுத்துகிறது. இது, பொதுக்கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதுடன் அது வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையால் 1996 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக் கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல் மற்றும் அதை விரிவாக்குதல் குறித்த ஆய்வு மற்றும் அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்கு உறுதிபூண்டுள்ளது.

முகவரி: 6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5,
தொலைபேசி இலக்கம்: +94(11)2081384-6
இணையதளம்: http://www.cpalanka.org

சோஷல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கருத்துக்கணிப்பு ஆய்வுப் பிரிவாகும். இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமானதும், தொழில் முறையானதும் மற்றும் சுயாதீனமானதுமான ஒரு கருத்துக்கணிப்பு நிலையத்திற்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 1999ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கருத்துக்கணிப்பு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையின் உந்துதலால், சோஷல் இன்டிகேட்டர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஏராளமான சமூக- பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் குறித்து கருத்துக்கணிப்புக்களை நடாத்தி வருகின்றது.

முகவரி: 6/1B,1/1, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5,
தொலைபேசி இலக்கம்: +94(11)2081384-6
இணையதளம்: http://cpalanka.org/survey-research/

Making Social Research Count